விலை சதம் 50 ★ பக்கங்கள் — 8

சகல பல் வியாதிகளையும் போக்கவல்லது

அண்ணு பற்பொடி

பாவித்த வெற்றுப் பைக் கட்டுகள் 15 அனுப்பி இனாம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணு தொழிற்சாலை

இணுவில்;

தொலைபேசி: 7412.

ஈழநாடு

வார மலர்

THE EELANAADU VAARAMALAR

மில்க்வைற் சவர்க்காரவெடர் துரித சலவைக்கு

மில்க்வைற்


சலவைத் தூள் வாங்கி உபயோகியுங்கள், பல அளவுகளிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. மேலுறைகளை சேகரித்து அனுப்பி இருந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்

யாழ்ப்பாணம்.

SRI LANKA ... RECEIVED 1978-6-19 PERIODICALS DIV. ... LIBRARY

மலர் 20 ஆனி 4 நாள் 11 ஞாயிற்றுக்கிழமை 18—6—78 இதழ் 127



கபிலவஸ்து புனித புத்த இன்னங்கள் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் வந்தபோது எடுத்த படங்கள் இவை. முதல் படத்தில் புனித இன்னங்களுக்கு கலாச்சார அமைச்சர் திரு ஈ. எல். பி. ஹுருல்லே, அகில இலங்கை இந்துமாமன்ற தலைவர் திரு வி. இலகுப்பிரமணியம் ஆகியோர் அஞ்சலி செலுத்துவதையும், புனித இன்னங்களை எதிர்பார்த்து நின்ற யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோ, யாழ் மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா ஆகியோர் ஆலோசனையில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் புனித இன்னங்களை ஏற்ற அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோ அஞ்சலி செலுத்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

'படம் - தேவா'

கபிலவஸ்து சின்னங்களை

# சகல இன மக்களும் சேர்ந்து வரவேற்றனர்

[யாழ்ப்பாணம்]

கபிலவஸ்துவிலிருந்து கொண்டுவரப்பட்ட புத்த பெருமானின் புனித இன்னங்கள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தபோது, சகல இன மக்களும் ஒன்றுசேர்ந்து வரவேற்று வெண்மலர்கள் தூவி தரிசித்தார்கள்.

யாழ்ப்பாணம் எம். திரு. வெ. யோகேஸ்வரன் புனித இன்னங்களுக்கு வெண்மலர் தூவி வரவேற்றார். அவரைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோவும் உதவி கலைக்டர் திரு எஸ் எம் ஜே சௌரத்னாவும் மலர் தூவினார்கள். இதனைத் தொடர்ந்து புனித இன்னம் ஊர்வலமாக யாழ். நாக விகாரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மக்கள் தரிசனத்திற்காக வைக்கப்பட்டது.

புனித இன்னம் வருகையை யொட்டி யாழ் கச்சேரி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நாக விகாரை வரை வீதிகள் மகர தோரணங்களாலும் பௌத்த கொடிகளாலும் சோடிக்கப்பட்டிருந்தது.

தலைவாவிலிருந்து தேற்றுக்காலை அலங்கார மஞ்சத்தில் புனித இன்னம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டது. புனித இன்னங்களுடன் வவுனியாவிலிருந்து கலாச்சார அமைச்சர் திரு ஹுருல்லே, அந்தரங்கச் செயலாளர் திரு கருணாரத்ன, வவுனியா யூ. என். பி. அமைப்பாளர் திரு புலேந்திரன் ஆகியோர் வந்திருந்தனர்.

## சாவகச்சேரியில்

புனித இன்னம் வரும் வழியில் சாவகச்சேரி மக்களால் கட்டடம் யொலின் தென்னம் ஆகியவை தோரணங்களாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. புனித இன்னங்களை பார்வையிட சந்தியில் தோறும் மக்கள் திரண்டிருந்தனர் ஆனுல் எவ்விடத்திலும் நிறுத்தப்படவில்லை.

சரியாக 10-55 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு சமீபத்திலுள்ள ரயில் கடவைச் சந்தியை வந்தடைந்தது.

தங்கநிறத்தாலான பேழையில் புனித இன்னங்கள் வைக்கப்பட்டு கந்திமர கண்ணாடியால் அலங்கரிக்கப்பட்டு அலங்கார ரதத்தில் கொண்டு வரப்பட்டது, ரதத்திற்குள், புனித இன்னத்தை சுற்றி பௌத்த குருமார்கள் அமர்ந்திருந்தார்கள்.

ரதம் திறந்த பட்டதும் யாழ்ப்பாண எம் பி யும், அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக ரதத்தின் ஏறிப் புனித இன்னங்களுக்கு மலர் தூவினார்கள்.

8-ம் பக்கம் பார்க்க

## ஹெலிக்காப்டர் மலர் தூவியது

(யாழ்ப்பாணம்)

புத்தரின் புனித இன்னம் யாழ். ஆரியகுளம் சந்தியை வந்தடைந்ததும் விசேட ஹெலிக்காப்டர் ஒன்று வானில் தாழப்பறந்து புனித இன்னத்தின்மேல் மலர்களை அள்ளி வீசியது.

இக்காட்சியைப் பார்வையாளர் களிப் பெரிதும் கவர்ந்தது. (க-இ)

## நல்லூர்க் கந்தனை கலாசார மந்திரி வழிபட்டார்

[யாழ்ப்பாணம்]

கலாச்சார அமைச்சர் திரு ஹுருல்லே நேற்று நண்பகல் 12 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு வந்து வழிபாடு செய்தார்.

அமைச்சருடன் கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா முன்னாள் யாழ். உதவிஅரசாங்க அதிபர் திரு கி. முருகேசம் பிள்ளையும் வந்து வழிபட்டனர்.

கல்வி அமைச்சருக்கு

## ரயில் நிலையத்தில் அமோக வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில், வடபகுதிக்கு நான்கு நாள் உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற்கொண்டு வந்த கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தினாவுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 8-30 மணிக்கு அமைச்சர் ரயில் நிலையத்தை வந்தடைந்ததும் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ, வடபகுதி வித்தியாதிபதி திரு. நி. மாணிக்கவாசகர், பிரதம ரயில் நிலைய அதிபர் திரு. ஜோன் தம்பி

[8-ம் பக்கம் பார்க்க

கோப்பாய் பெண்கள் ஆசிரிய கலாசாலையில்

# யோகாசன பயிற்சிவகுப்பை

## அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்

[யாழ்ப்பாணம்]

சிங்களவராயிருப்பினும் தமிழராயிருப்பினும் வங்காளியாகவோ குஜராத்தியாகவோ பர்மியராகவோ இருப்பினும் நாம் அனைவரும் மனிதர்கள். எம்மைப்பிடிக்கும் நோய்கள் அனைவர்க்கும் பொதுவானவை. அந்நோய்களில் இருந்து விடுபட நாம் உடற்பயிற்சிகளை மேற்கொள்ளல் அவசியம், குறிப்பாக யோகப்பயிற்சிகள் நல்ல ஆரோக்கிய வாழ்வுக்கு வழி வகுக்கும்.

இவ்வாறு கோப்பாய் பெண்கள் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற யோகப்பயிற்சி பற்றிய வகுப்பை ஆரம்பித்து உரையாற்றிய கல்வி அமைச்சர் திரு நிஸங்கா விஜயரத்ன கூறினார்.

அமைச்சருடன் அவரது பாரியார், புத்திரர்கள் ஆகியோரும் வந்திருந்தனர். கல்லூரி மாணவர்களின் பாண்ட் குழு இசைத்து அமைச்சரை வரவேற்க ஏனைய பிரமுகர்கள் மாலை சூட்டினர்.

மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்ட அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது

மேல்நாட்டு வாழ்க்கை முறைக்கு உகந்த விளையாட்டுக்கள் இருப்பது போல கீழைத்தேச வாழ்க்கை முறைக்கும் சில பயிற்சிகள் உண்டு. அவைவெறும் உடல் ஆரோக்கியத்தை மட்டுமன்றி ஆத்மீக ரீதியான உள்ள வளர்ச்சியையும் அளிக்கும்.

[8-ம் பக்கம் பார்க்க]

## யாழ் வளாகத்தை பார்வையிடுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன இன்று யாழ். வளாகத்தைப் பார்வையிடுவார்;

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் புதிய கட்டிடம் ஒன்றுக்கான அடிக்கல்லையும் அமைச்சர் இன்று நாட்டுவார். [இ]

## ராஜிநாமாச் செய்யக் கோருவர்?

(கொழும்பு)

இ. போ. ச. வடபிராந்திய நிர்வாக இயக்குநர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள திரு செல்லத்தம்பி உமாகாந்தனை அப் பதவியிலிருந்து ராஜிநாமாச் செய்யும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப்பீடம் கோர இருப்பதாகத் தெரிகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஐக்கியத்தைக் கருத்திற் கொண்டே இக்கோரிக்கையை விடுக்க இருப்பதாகவும் தெரிகிறது. [ம-இ]

விற்பனைக்கு

A 40 சோமசெற், டெவன், பிஸ்ரன்ஸ் எல்லா சைஸ்களிலும் எம்மிடம் விற்பனைக்குண்டு.

துரை

ஆர். ஜி. பில்டிங்ஸ், 66 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7750

9615

# தோல்வியிலும் அவனுக்கு ஒரு பெருமை!

கோப்பாய் எஸ். சிவம்

அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது. வருகிற மாதம் நாலாம் தேதி அவளுடைய பிறந்த நாள். அன்றுடன் அவளுக்கு இருபத்தொரு வயது நிறைந்து இருபத்திரண்டு வயது ஆரம்பமாகிறது என்பதும் அவனுக்குத் தெரியும். அவன் நினைத்துக் கொள்கிறான். அவளுக்கு ஏதாவதொரு பரிசுப் பொருள் வழங்கவேண்டுமென்று. என்ன பரிசு வழங்கலாம்? அது அவளுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக- தினமும் அவள் பயன்படுத்துவதாக- எளிமையான ஒரு பரிசாக இருக்கவேண்டும். அவன் யோசிக்கிறான்...

திடீரென்று ஒரு மின்னல் பொறி. அவனது நெஞ்சத்தில் ஒரு தேக்கம். வருகிறமாதம் வரப்போகின்ற அவளுடைய பிறந்த தினத்தைப்பற்றி நான் இப்போதே மண்டையை உடைத்துக்கொள்கிறேன். அவளுக்கு என்னுடைய பிறந்த நாள் எப்போது என்பதுகூடச் சரியாகத் தெரியாது...!

அவளுடைய பிறந்த தேதி மட்டுமா அவன் தெரிந்து வைத்திருக்கிறான்? அவளுடைய நட்சத்திரத்தை-ராசியினைத் தெரிந்து வைத்திருக்கிறான். வாரவாரம் பத்திரிகைகளில் ராசிபலன் பகுதியைக்காணும் போது-நம்பிக்கை உண்டோ இல்லையோ, சரியாக நடக்கிறதோ இல்லையோ - அவளுடைய ராசிக்குரிய பலனைப் படித்துத் தெரிந்துகொள்வதில் அவனுக்கு ஓர் ஆர்வம்.

அவள் பரீட்சை எடுத்த வருடம், பரீட்சை முடிவுகள், அவள் பங்குகொண்ட போட்டிகள், பெற்ற பரிசுகள் இவை மட்டுமன்றி அந்தந்தச் சந்தர்ப்பங்களில் அவள் அணிந்திருந்த ஆடைகளின் வண்ணங்கள்... என்று இவைகளைக்கூட அவன் மிக்க கவனத்துடன் நினைவில் வைத்துக்கொள்கிறான்.

அவளைப்பற்றிய விஷயங்களை அறிவதில் அவன் எவ்வளவு தூரம் கவனமெடுத்துக் கொள்ளுகிறான். அதில் அவன் ஒரு சுகத்தை அனுபவிக்கிறான். ஆனால் அந்த அளவுக்கு அவள் தன்னைப்பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம்காட்டுவதில்லையே என்று அவன் ஒரு கணம் ஏக்கம் அடைகிறான்.

என்றோ ஒரு நாள் வாசித்த ஒரு வசனம் அவனது நினைவிற்கு வருகிறது "ஒரு பெண் ஓர் ஆண் மீது ஆர்வம்கொண்டாளானால் அவனைப்பற்றிய சகல விபரங்களையும் அவனது ரசனைகளையும் எப்படியாவது தெரிந்து கொண்டுவிடுகிறாள்" என்பதாகும் அது.

ஆனால், தன்னுடைய விஷயத்தில் இந்நிலைமை மாறுபட்டிருக்கிறதே என்று அவன் எண்ணுகிறான். "அவளுக்கு என் மீது அத்தனை தூரம் நாட்டமில்லையா? அல்லது என்னுடைய இயல்பான குணமான தாழ்வு மனப்பான்மை காரணமாக நான் அவ்வாறு எண்ணுகின்றேனோ...?"

"அவள் என்னைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவுதானே! ஒவ்வொரு விஷயத்தையும் என்னிடம் துருவிக்கேட்பதற்கு கூச்சப்பட்டிருக்கலாம். பெண்மைக்கேயுரிய அடக்க சுபாவமும் காரணமாக இருக்கலாம் என்றெல்லாம் தன் மனத்தைத் தானே சமாதானப் படுத்த முயற்சி செய்கிறான்.

ஆனால் அவன் மனம் அமைதி கொள்ளவில்லை' ஒரு வேளை அவள் என்னைச் சோதிக்கவில்லையோ! அவள் என்னைப் புரிந்துகொள்ளவில்லையோ? என்று குழம்பிக்கொண்டிருக்கிறது.

அன்றொருநாள்-

அவளுக்காக அவன் காத்திருக்கிறான். அவள் தோழிகளுடன் வருகிறாள். இவனைக் கண்டவள் ஒரு புன்னகையை நெளியவிட்டவாறு 'என்ன தவம்! எங்கை இந்தப் பக்கம்!' என்று வினவுகிறாள்.

"என்ன சந்திரா! உன்னைக் காணத்தான் நான் வந்தனான் என்று உன்னால் உணரமுடியவில்லையா?" என்று இதயத்தில் எழுந்த கேள்வியை சூழ்நிலையை உத்தேசித்து நிறுத்துகிறான்.

'சும்மா' ஒரு நண்பரைப் பார்க்கவந்தனான்' என்று கூறிச் சமாளிக்கிறான்.

அந்த நிகழ்ச்சியை இப்போது ஆராய்கிறது அவன் மனம். அவள் உண்மையாகவே அவனைப் புரிந்துகொள்ளவில்லையா? புரிந்துகொள்ள விரும்பவில்லையா? அல்லது புரிந்தும் புரியாததுபோல நடிக்கிறாளா? அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைகளும் அவளது பெண்மையின் மென்மையும்தான் அவளை அப்படி நடக்கவைக்கின்றன?

அடுத்தமுறை அவன் அவளைச் சந்திக்கும்போது ஓரளவு தனிமையும் அவகாசமும் கிடைக்கின்றன. இதயத்தில் குழம்பிக்கொண்டிருந்த கேள்விகள் ஜனனமாகின்றனவா?

'சந்திரா! நாங்கள் இத்தனை வருடமாகப் பழகி வருகிறம். ஆனால் இவ்வளவு காலத்தில் நீங்கள் என்னை எந்த அளவுக்குப் புரிந்துகொண்டிருக்கிறீர்களோ எனக்குத்தெரியாது. என் மீது நீங்கள் அதிகம் நாட்டம் கொண்டிருக்கவில்லையோ என்று நான் எண்ணுகிறேன்...' என்று இழுத்தான் அவன்.

"ஏன் தவம் அப்படி நினைக்கிறீர்கள்? திடீரென்று அப்படி ஒரு சந்தேகம் வருவதற்கு நான் ஏதாவது தவறாக நடந்துவிட்டேனா?" என்று கேட்டாள் சந்திரா. அவனது கேள்வியில் தான் அதிகம் பேசிவிட்டேனோ என்ற ஒரு தயக்கமும் கலந்திருந்ததை அவள் துல்லியமாக அவதானித்தாள்.

"இல்லை சந்திரா! உங்களைப் பற்றிய ஒவ்வொரு சின்ன விஷயத்திலும் கூட நான் எவ்வளவு அக்கறையும் கவனமும் எடுத்துக்கொள்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் அந்த அளவுக்கு நீங்கள் என்னைப் பற்றிய விஷயத்தில் ஆர்வம் காட்டுவதில்லை என்பது போல நான் உணர்கிறேன்.

அதனால்தான்..." என்று தயங்கிய தவம் அவள் விழிகளைக் கூர்ந்து நோக்கினான்.



அவளது விழிகளில் தயக்கமும் கலக்கமும் அகன்று ஒரு நிம்மதியும் அதே நேரம் ஒரு ஏக்கமும் படர்வதையும் அவன் அவதானித்தான். ஒரு பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டது.

"ஓ! இவ்வளவுதானா? நான் என்னவோ ஏதோ என்று பயந்து விட்டேன். ஆனால் நீங்கள் அநாவசியமாக உங்களையே குழப்பிக்கொள்கிறீர்கள். தவம், உண்மையாகவே என் மீது இவ்வளவு அன்பும், ஆர்வமும் காட்டுகிற உங்களை அடைவதற்கு நான் பெருமைப் படவேணும். அதே நேரம் அத்தனை தூரம் உங்கள் மீது நான் அன்பைப்பொழிந்து என் மனத்தைத் தெரிவிக்கிறதுக்கு முடியேல்லை என்று எனக்குள்ளே ஏங்கிறதும் உண்மை. 'சந்தர்ப்பம் சூழ்நிலைகள் என் மனதினைத் திறந்து காட்டிறதுக்குச் சாதகமாய் அமையேல்லை. 'காதல்' என்கிற விஷயத்திலை ஆண்களைக் காட்டிலும் அதிகம் உணர்ச்சிவசப்படுகின்றவர்கள் பெண்கள்தான். ஆனால் அந்த உணர்ச்சியினை அடக்கி உரிய காலம் வரை காத்திருக்கவேண்டியவர்களும் பெண்கள்தான். ஆண்களைப் போலை நினைக்கிற எல்லாத்தையும் சொல்லிவிடப் பெண்களாலை முடியாது."

சற்று நிறுத்தியவள் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி ஆசுவாசப்படுத்தி - முகத்தைக் கைக்குட்டையால் அழுந்தத் துடைத்துக்கொண்டு அவனது கால்விரல்களை நோக்கிய வண்ணம் தொடர்ந்தாள்.

'ஆனால் தவம், நீங்கள் ஒரு விஷயத்திலை தோற்றுப்போய் விட்டியள். என்னை நல்லாய்ப் புரிந்துகொண்டு உங்களுடைய உணர்ச்சியளைக் கவிதைகளிலையும் வடிக்கிற நீங்கள், உண்மையில் என்னை முழுமையாய்ப் புரிந்துகொள்ளேல்லை. உங்களை நான் புரிந்துகொள்ளேல்லையோ என்று சந்தேகப்பட்டியள். ஆனால் உங்களை நான் நல்லாய்ப் புரிந்து கொண்டு என் உள்ளத்திலை பூஜிக்கிறவாறு உண்மையைப் புரிந்துகொள்ளுறதிலை தவறிவிட்டியள்.

புரிந்துகொள்ளுறதும், ஆர்வம் காட்டுறதும் புறத்திலை மட்டுமல்ல; அகத்திலும் நிறைய உண்டு. உங்களோடை தொடர்பான புற விஷயங்களை நான் அறிந்துகொண்டது குறைவுதான். ஆனால், உங்கடை இலக்கியங்கள் மூலம் உங்கடை உள்ளத்தைத் தெளிவாகவே புரிந்து வைத்திருக்கிறன். அது தான் தவம் உண்மையான புரிந்துகொள்ளல்."

அவள் தெளிவான வார்த்தைகளை உதிர்த்துவிட்டு அவனை நிமிர்ந்து பார்க்கிறாள். அந்த அழகிய கண்களினூடாக அவளது ஆழமான அன்பையும், பரிசுத்தமான இதயத்தையும், மென்மையான பெண்மையையும் அவன் தெளிவாகப் புரிந்துகொள்கிறான். அப்போது

'ஓ! அவளுடைய அந்த இதயத்தில் எத்தனை தூய அன்பு ஊற்றெடுக்கிறது?' என்று வியந்தவாறு அவனது முகத்தினின்று தன் விழிகளை அகற்றி அவள் பாதங்களில் நிறுத்துகிறான். மஞ்சள் நிறச் சேலையின் கீழ் அரைவாசி தோன்றும் அந்த வெண்ணிறப் பாதங்களைப் பார்த்துக் கொண்டு அவன் மெல்லக் கூறுகிறான்.

"சந்திரா, உண்மையில் நான் தோற்றுத்தான் போயிட்டன். ஆனால், அந்தத் தோல்வியிலை நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறன். ஏனென்டால், அந்தத் தோல்வியாலை என்ரை மனம் தெளிவடைந்திருக்கும். அதுமட்டுமல்லாமல், என்னைத் தோற்கடித்தவள் நீ என்டதாலை நான் பெருமைப்படுகிறன். சிலவேளைகளிலை தோல்விகளே வெற்றிகளாவதும் உண்டு. இல்லையா சந்திரா."

(யாவும் கற்பனை)

---

(சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் நினைவாஞ்சலி)

## மாதவத்து முனிவர்போல் [illegible]ார் கண்டீர்

வித்துவான் சி. ஆறுமுகம்

தென்தில்லை மணிமன்றில் கூத்தாடும்
    தெய்வத்தின் முன்னே நின்றே
அன்புருகிக் கும்பிட்டு அரற்றி நிற்கும்
    அறிவுருவத் தூயன் தன்னை,
என்புருவ வடிவுடைய ஏந்தல் சிவ
    பாத சுந்தரப் பேரானை
நன் பொன்னின் நெற்றியெலாம் நீறணிக்
    கண்டொரு நாள் நடுங்கா நின்றேன்!

எழும் போதும் நடராச பிரபு வெனும்!
    எழுந்துள்ளம் பரிவு கூர்ந்து
தொழும் போதும் நடராச பிரபுவெனும்!
    தொழுதுள்ளமுருகி நொந்தே
அழும் போதும் நடராச பிரபுவெனும்!
    அணிதில்லை வீதி யெங்கும்
விழும் போதும் நடராச பிரபுவெனும்!
    வித்தகனார் பத்தி விஞ்சி!

கல்விநலம் செறிந்துயர்ந்த சிவபாத
    சுந்தரனார் கலையில் என்றும்
நல்லவர்கள் தமையாக்கி நாட்டுக்கு
    ஈந்த நன்றி மறப்பார் யாரே?
செல்வமலி குடிப் பிறந்த சீராளன்
    சிவ நெறிக்கே தன்னை யென்றும்
வல்ல தொண்டன் ஆக்கிநின்றே மறையாத
    பணிபுரிந்தோன் மறையான் என்றும்

ஆங்கிலத்தில் செந்தமிழில் அரும் பொருளை
    ஆய்ந்துரைக்கும் ஆற்றல் வாய்ந்தோன்
எங்கிவரும் இளைஞருளம் இடங்கொள்ள
    வழியுரைத்த ஏந்தல் கண்டீர்!
நீங்காத சிவபக்தி நெறிவழுவா
    நீர்மையினேன் நீண்ட காலம்
தூங்காமல் தூங்கிநட ராசர்சுகம்
    மணி மன்றில் துய்த்தே நின்றான்!

வேதங்கள் ஆகமங்கள் விளங்கு சைவ
    சித்தாந்த மெய்ம்மை நூல்கள்
போதமெலாம் பொருந்து பொருள் ஒன்றுமேவும்
    என்றுணர்ந்த புனிதன் கண்டீர்
மாதவத்து முனிவரைப் போல் வாழ்ந்த நிலை
    கண்டுணர்ந்து மகிழ்ந்தோம் இன்னாள்!
தீதகன்ற நிலை மறந்தோம்; பன்னாட்கள்
    இன்றேனும் சிந்திக் கின்றோம்!

எழுத்தாலும் பேச்சாலும் எழுதரிய
    பக்தி முறை கேற்றத் தாலும்
அழுகின்ற நடராசப் பதம் பணிந்த
    சிவ பாத சுந்த ரந்தம்
பழுத்த மனத் தொண்டின் சீர் பரவுகின்றோம்
    நூற்றாண்டில்! பாவம் போக!
தொழத்தக்க புலோலி தரு தூயசைவன்
    தொண்டினையெம் சிரமேற் கொள்வோம்!

---

நடந்த சம்பவங்கள்

## சுடலைப் பக்கமிருந்து குரல் வந்தது; ஆனால் ஆளைக்காணோம்!

பகல் பதினொரு மணியிருக்கும். நானும் மூத்த அக்காவும் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றோம்.

எனக்கு அப்போது பன்னிரண்டு வயதாயிருக்கும். அக்காவுக்கு பதினாறு வயது.

வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் கிணறு இருந்தது. சிறிது தூரத்தில் கிராமத்துச் சுடலை.

அச்சமயத்தில் சுற்று வட்டத்தில் ஆள் நடமாட்டமே இல்லை.

அக்காவும் நானும் குளிப்பதற்கு ஆயத்தமானோம்.

சுடலைப் பக்கமாக தீனக் குரலில் அக்காவின் பெயரைச் சொல்லி யாரோ கூப்பிடுவது கேட்டது.

'ராணி.!'

தெரிந்த குரல்தான். ஆனால் குரல் வந்த பக்கத்தில் யாருமில்லை!

மீண்டும் அதே குரல், 'ராணி!' சற்று உரத்துக் கேட்டது. ஆளைக் காணோம்.

மீண்டும் அதே குரல் அருகாமையிலேயே கேட்டது. அக்காவின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்ட ஆள் யாராயிருக்கும்?

ஆள் நடமாட்டம் இல்லை; ஆனால் குரல் மட்டும் கேட்கிறது? எங்களுக்குப் புரிந்துவிட்டது. அதற்கு மேல் எங்களால் எப்படி நிற்கமுடியும்.

ஒரே ஓட்டம் வீட்டுக்கு வந்து சேர்ந்த பிறகுதான் அமைதியேற்பட்டது.

●

### சைக்கிள் பின் சீட்டில் அமர்ந்தவர் யார்?

வயதான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பின்வரும் சம்பவத்தைச் சொன்னார்.

'வெள்ளோட்டம்"

எங்களுடன் பணிபுரிந்த இளம் கான்ஸ்டபிள் ஒருவர் நீரில் மூழ்கி மரணமாகிவிட்டார். ஒருநாள் சைக்கிளில் நான் அவர் மூழ்கி மரணமான இடத்தைக்கடந்து சைக்கிளில் போய்க்கொண்டிருந்தேன். திடீரென யாரோ என்னைக் கூப்பிட்டு "நானும் வாறேன்" என்று கூறினார்கள். நான் திரும்பிப் பார்த்தேன் ஆள் யாருமில்லை.

திடீரென்று சைக்கிளின்பின் பக்கம் யாரோ அமர்ந்து கொண்டதுபோல் தெரிந்தது. நான் வேகமாகப் போய்விடுவ

(6-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் தோன்றிய —விதம்!

திராவிடம் என்னும் சொல் வடமொழியில் குறிக்கப்பட்டுள்ளதென்றால் வடமொழி நடைமுறையில் வந்ததின்பின்தான் திராவிடம் கண்டுபிடிக்கப்பட்டதா என்ற ஐயமெழலாம். ஆனால் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் சிறிதளவு புவியியலையும் மொழிவளர்ச்சியையும் ஆராய்ந்து பார்த்தால் சந்தேகமற்றமுறையில் தமிழ் தோன்றிய விதம் புலனாகும்.

தமிழ்மொழி வழங்கப்பட்ட பிரதேசம் தமிழகம் என 'அலைகடல் வரப்பில் தமிழகம் கேட்ப' [புறம் 168] 'இமிழ் கடல் வளைப்பின் தமிழகம்' [சிலப் 3:37] 'சம்புத்தீவினுள் தமிழக மருங்கில்' [மணி 17-62] 'வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' எனத் தொல்காப்பியத்திற்குச்சிறப்புப்பாயிரம் கூறிய பனம்பாரனார் என்னும் ஆசிரியரும் எடுத்துரைத்துள்ளார்.

மிகப் பழைய நூலான தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர் தன் காலத்திற்கு முன்னரும் இலக்கண நூல்கள் இருந்திருக்கவேண்டும் எனவேதான் 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்' என தமக்கு முற்பட்ட இலக்கிய மரபை எடுத்துரைத்துள்ளார். எனவே எழுத்திலக்கண ஆராய்ச்சி ஏற்படுவதற்குக் குறைந்தது நாலைந்து நூற்றாண்டுகள் தமிழ்மொழி வழக்கிலிருந்து வந்திருக்க வேண்டும் எனவே தொன்மையாலும் நிறைநூல் நன்மையாலும் சிறந்த நூல் தமிழில் இறவாமல் 3000 ஆண்டுகளுக்கு மேல் நின்று நிலவும் பழமைக்கு மேலாகத் தமிழ் குறையிலா நிறைவுடன் அறிவுசால் செறிவுடன் நிரம்பு வளம் வரம்பிறவாமல் வளர்ச்சி பெற்றதென்பது வெள்ளிடைமலை போல் துலங்குகின்றது.

வேறு நாட்டாருடன் நெருங்கிய தொடர்புகொள்ளுமுன் தமிழிலக்கியம் தோன்றிவரத் தொடங்கியது. இதனால் தொன்மைக்காலத் தமிழ் இலக்கியம் நாட்டின் சொந்தக் கலையால் வளர்ந்தது எனலாம். எனவே சார்பற்ற கலப்பற்றதன்மையால் தமிழ் நாட்டின் இயற்கை வளமும் பழந்தமிழர் வாழ்க்கையுமே அப்பழைய இலக்கியத்திற்கு அடிப்படையாக இருந்தன; அருவியும் ஆறும், வயலும் வெளியும், புதரும், சோலையும் நிறைந்து முப்புறமும் கடல் சூழ்ந்ததாய் அழகு செய்த அமைந்த தமிழ்நாடு இயற்கை வளம் பொழிந்த நாடாகத் திகழ்ந்தது.

### இயற்கையுடன் இயைந்த வாழ்வு

எனவே தமிழர் இயற்கையுடன் ஆடி இயற்கையின் உதவிபெற்று இயற்கையோடு இயைந்து வாழும் இயல்பைப் பெற்றிருந்தனர். இவ்வித சூழலில் வாழ்ந்த தமிழரின் கற்பனைக் கனவுகள் தானும் இயற்கையோடு இயைந்தனவாகவே இருந்தன. இவ்விதம் வளர்ந்த தமிழ் நாகரிகம் இயற்கைக்கே தன்னை அர்ப்பணிக்கும் தொண்டில் மனிதனைப் பூரணமாக்கும் பாதையில் சரித்திரத்தில் தனித்திருக்கவில்லை. சரித்திரம் காணாத நிலையில் தோன்றிய தமிழ் போல் மேற்கு ஆசியாவில் தோன்றிய சுமேரிய நாகரிகத்தைப் பற்றிப் பார்ப்போம்.

மெசப்பட்டோமியா எனப்படும் தற்போதைய 'ஈராக்' நாட்டில் மேல் இழக்கு

**வி. இராசசேகரம்**

மலைச்சாரலிலிருந்து தோன்றி பாரசீகக்குடாவை நோக்கிப் பாயும் 'தைகிரீஸ்' 'யூபிரட்டிஸ்' நதிகளின் கரையிலேயே ஆதிக்குடிகள் தோன்றினர். கி. மு. 10,000 வருடங்களுக்கு முன் குகைகளை விட்டு ஆற்றங் கரையோரத்தில் வசிக்கத் தொடங்கினர். தைகிரீஸ் நதிக்கரையில் 'ஜார்மோ' எனப் படுமிடத்தில் 7000 வருடங்களுக்கு முன்னும் இருப்பிடங்கள் தோன்றியபோதும் இவ்விரு நதிகளும் பாரசீகக்குடாவுடன் சங்கமிக்குமிடத்தில் பல கிராமங்கள் தோன்றி பாபிலோனிய நகரத்தை உருவாக்கியதென புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

இவ்விதம் தோன்றிய 'எரிது' என்னும் புராதன நகர்ப்பகுதியில் கி. மு. 5000 வருடங்களுக்கு முன் 'எங்கி' எனும் நீர்த்தெய்வத்திற்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தைக் கேந்திரமாகக் கொண்டு இயற்கையின் அச்சுறுத்தலாகிய வெள்ளப் பிரவாகத்தைக் கண்டு அஞ்சிய ஆதிக்குடிமக்கள் இவ்விடமெல்லாம் இயற்கைத் தெய்வத்திற்குரியதாகவும் தமது கடமைகளும் அந்த தெய்வத்தையும் அதனுடைமைகளையும்பேணிக் காப்பதே என அம்மக்கள் அப்பெருமைக்கு அயராது உழைத்துவர பபிலோனின் நாகரிகம் மேலோங்கியது.

### சுமேரிய மொழி

இக்காலத்தை 'அல்வைத்' எனவும் கி. மு. 8500 வருடங்களென்றும் சுமேரியா கால ஆரம்பமெனக் கணிக்கப்படுகின்றது. அன்று தோன்றிய மொழியே சுமேரிய மொழியென்று பொதுவாகக் குறிக்கப்படுகின்றது. எனவே சுமேரிய, திராவிட நாகரிகங்களுக்கான தொடர்பென்னவென ஆராய்வோம்.

அக்கால எல்லையில் மத்திய ஆசியாவில் இடம்பெயர்ந்து பெரும் மந்தைகளையும் குதிரைகளையுமுடைய கூட்டங்கள் திரிந்தனவென்றும் கலைக்கப்பட்டு வழிந்தோடிய கூட்டத்தினரே சிறுவிற்கும், வட இந்தியாவுக்கும் பாரசீகத்திற்கும் பாரசீகமூடாக ஈரான், ஈராக்காகிய நாடுகளுக்கும் சென்றனர் என்பது ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொண்டதேயாம். எனவே கி. மு. 2000 அளவில் ஆரியர் வருகை ஏற்பட்டதெனலாம். அவர்கள் பல நூற்றாண்டுகளாகக் கொள்ளைக்கூட்டத்தினராகப் பல இடங்களில் சேதம் விளைவித்ததேயல்லாமல் தமக்கென நாகரிகத்தையோ, பண்பாட்டையோ கொண்டிருக்கவில்லை. எனவே வடமொழியெனில் திராவிடத்திற்குப் பின் ஏற்பட்ட மொழி வளர்ச்சியே தவிர முன் தோன்றியதல்ல.

புவியியலாளர் கருத்தின்படி தொன்மையான தென்னிந்தியா மிகப்பழைய கலப் பாறைகளைக் கொண்டுள்ளது. உலகம் தோன்றிய காலத்தில் தீக்குழம்பாக இருந்த மண் குளிர்ந்து அமைந்த நிலப்பகுதி தென்னிந்தியாவே என ஆராய்ச்சியாளர் பலர் முடிவு கண்டுள்ளார்கள். தற்போது இந்தியக்கடலாக உள்ள பகுதியில் பரப்பான நிலமும், மலையும் ஆறும் இருந்து பின்பு மறைந்ததென்றும் கருதுவாருமுளர் இவ்வித மிகுந்த பரப்பே 'லெமூரியாக்' கண்ட

[6-ம் பக்கம் பார்க்க]

# கிராமியக் கடனும் மக்கள் வங்கியும்

தேசியப் பொருளாதாரத்தின் வரையிலக்கண விளக்கங்களைத் தேடுவதிலும் பார்க்க அது பாதிக்கப்பட்டதற்கான காரணங்களை ஆராய்வது பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதற்காகச்செய்ய வேண்டிய பணிகளுள் முக்கியமானதாகும். தேசிய பொருளாதாரத்தில் விவசாயத்துறை பழமைமிக்கதும் நிகழ்கால முக்கியத்துவம் கொண்டதுமாக ஓர் அடிப்படையான நிலையை வகித்து வருகின்றது. இந்தவிவசாயத் துறையைப் பொறுத்து நிதி பற்றாக்குறை, மிக முக்கியமானதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதுமாகும். நிதி ஆதரவு குன்றி பெரிதும் பாதிக்கப்பட்ட சுதேசப் பொருளாதார அம்சங்களுடன் விளங்கிய இத்துறை தனிப்பட்ட நிலப்பிரபுக்கள், வர்த்தகர் போன்றோரினும் நிர்ணயிக்கப்படாத முறையில் கொடுக்கப்பட்ட கடன்களிலும், அறவாக்கப்பட்ட வட்டியினாலும் அதிக அளவு பலமிழந்து காணப்பட்டது. அந்நியரின் தாக்கத்தின் பின்னர் இலங்கைப் பொருளாதாரத்தில் இரட்டைத் தன்மை ஏற்பட்டாலும் அத்தப்பட்ட காலத்திலிருந்து பெருந்தோட்டப் பொருளாதாரத்தில் சேமிப்பு அதிகரிக்கலாயிற்று. ஆனால் இப்படித் திரண்ட சேமிப்பு பெருந்தோட்டத் துறைக்குள்ளேயே திருப்பிவிடப்பட்டதுடன் அதனை மேலும் விஸ்தரிக்கவே உதவியது. தவிரவும் இந்நாட்டுப் பொருளாதாரத்துக்கு சொந்தமாக்கப்பட வேண்டிய பெரும் தொகைப் பணம் அந்நியரால் 'இலாபம்' என்ற பெயரில் தமது சொந்த நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதனால் உள்நாட்டு விவசாயத்துறைக்கு எவ்வித பலனும் ஏற்படவில்லை. தனிப்பட்டோரின் பண ஆற்றலே பெரும் தாக்கத்தை இத்துறையில் ஏற்படுத்தி வந்ததால் அதனைச் சீரான துறையாக்குவதற்கு எடுக்கவேண்டிய முயற்சிகள் ஏராளம் இருந்தன.

### நிறுவன ரீதியான முயற்சிகள்:

விவசாயிகளின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யுமுகமாக 1911ல் ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களும் கூட 1930—1950 காலப்பகுதியில் மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றிருந்தபோதும் கிராமியக்கடன் தொகையில் 7.4 வீதத்தை மட்டுமே அளித்துவந்தன. இந்த நிறு

**ஏ. சேனாதிராசா**

வனங்கள் மிக அண்மைக் காலம்வரை 1968ல் 21.7 மில்லியன் ரூபாக்களை சேமிப்புக்களாக வைத்திருந்தபோதும் கிராமிய விவசாயத் துறைக்கு இடைக்கால, நீண்டகால கடன்வசதிகளை அளிக்கவில்லை. இவை தமது அங்கத்தவர்களுக்கு மட்டுமே உற்பத்தி நோக்கில் உதவிபுரிந்தன எனலாம்.

### அரசாங்க ஈட்டுவங்கி

எல்லாவகை சிறிய விவசாயிகளுக்கும் நீண்டகால கடன் வசதிகளை நிலத்தைப் பிணையாக ஏற்றுக்கொண்டு அளிக்கும் என்ற நோக்கத்துடன் இரு குழுக்களின் ஆலோசனையின் முடிவில் 1931ல் அரசாங்க ஈட்டு வங்கி அமைக்கப்பட்டது. ஆயினும் நினைத்ததைப்போல் நிலத்தைப் பிணையாகப்பெற்றுக்கொண்டு கடன் வழங்குவது இதுவரை அமைந்திடவில்லை. உண்மையில் வறிய விவசாயி இந்த வங்கியிடமிருந்து கடன்பெறுவது கஷ்டமாக இருந்தது.

### வங்கியியல் குழு

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தி நான்காம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட வங்கியியல் குழு பிரித்தானிய வங்கிகள் நாட்டில் இருந்தபோதும் அவை பெருந்தோட்டப் பொருளாதாரத்துக்கு சேவையாற்றுவனவாக இருப்பதையும் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளர்ச்சிபெற்று இருந்தபோதும் கிராமிய மக்களின் கடன்படுநிலையில் பாரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தவில்லை என்பதையும் எடுத்துக்காட்டின. அரசாங்க உதவியுடன் நிறுவப்படப்போகும் வங்கி கூட்டுறவு வங்கிகள் கூட்டுறவு இயக்கங்களுடன்நேரடித்தொடர்புவைத்து கிராமிய மக்களுக்கு உதவவேண்டும் என்ற கருத்து வெளியிடப்பட்டது.

இந்த நோக்கத்துடன் இலங்கை வங்கி 1939ல் நிறுவப்பட்டதாயினும் எதிர்பார்க்கப்பட்டதுபோல கூட்டுறவு இயக்கத்துடன் இவ்வங்கி பிணைக்கப்படவில்லை. தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி அதிக அளவுசேமிப்பை 1930—1945 காலப்பகுதியில் வைத்திருந்தபோதும் சுதேச பொருளாதாரத்துக்கு அது அளித்த நிதி உதவி குறைவே: அதன் சேவை மட்டுப்படுத்தப்பட்டதற்கு அது ஒரு வர்த்தக வங்கியாக இல்லாமையும் ஒரு காரணமாகும்;

### கடன்படு நிலை

கிராமிய குடும்பங்களில் 54% வீதத்தினர் 1957ல் கடன் சுமையால் பாதிக்கப்பட்டிருந்தனர். இக்கடனின் மொத்தத்தொகை 516 மில்லியன் ரூபாயாக இருந்தது. அரசாங்கம், வர்த்தக வங்கிகள்,

[6ம் பக்கம் பார்க்க]

களைகள்
துரிதமாக மு
நெற்பயிர்
வளர்ச்சியைத் தடைசெய்து
அறுவடையை பாதிக்கின்றன.

தாமதிக்காமல்
களைகளை துரிதமாக,
முற்றாக
அழியுங்கள்.
நெற்பயிர் தோன்றி
3-5 வாரங்களுக்குள்
நம்பிக்கையான, பாதுகாப்பான
எம-50
இடுங்கள்

LANKEM




களைக் கொல்லி
நாடு முழுவதிலுமுள்ள கூட்டுறவுக்கடைகள்,
விவசாய சேவை நிலையங்கள்,
லங்கெம் டிப்போக்களிற் கிடைக்கும்

# 'சிவசங்கரி' முதன்முதல் எழுத ஆரம்பித்தது எப்படி?



'ஈழநாடு' வாசகர்களுக்கு சிவசங்கரியும்-சியாமா வும் அளித்த பிரத்தியேக போஸ் இது.

பிரபல பெண் எழுத்தாளர் திருமதி சிவசங்கரி தாம் கதை எழுத ஆரம்பித்த சூழ்நிலையை இங்கு விளக்குகிறார். அவரை சந்திக்காமலே இலங்கைப் பத்திரிகையொன்று அவரது பேட்டியை வெளியிட்டிருந்த சுவாரஸ்யமான தகவலும் இங்கு வெளியாகின்றது. திருமதி சிவசங்கரியின் எழுத்துக்களும், அனுபவங்களும் எழுதத்துடிக்கும் இளம்எழுத்தாளர்களுக்குப் பயன் தருபவையாக இருக்கும் என்று கருதுகின்றோம். (ஆ-ர்)

ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் சரித்திரசமரனமாகப் போட்டியிடும் காலம் [illegible] எழுத்துத்துறையும் [illegible] லை. அந்த [illegible] தமிழ்நாடு எழுத்த[illegible]ளிடையே மிகவும் புகழ்பெற்றிருப்பவர் திருமதி சிவசங்கரி அவர்கள். தமிழ்நாட்டில் விழுப்புரம் என்ற நகரின் வெளிப்புறத்தில் அமைந்துள்ள இவரது கணவர் திரு. சந்திரசேகரன் B. E. அவர்களுக்குச் சொந்தமான ஒரு தொழிற்சாலை ஒன்றுடன் இணைந்த வீட்டில் அமைதியாகக் குடும்பம் நடத்துகிறார் சிவசங்கரி. இவரை 'ஈழநாடு' வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த விரும்பி கடந்த 14-5-78 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இவர் வீட்டுக்குச் சென்றேன். சியாமா இருக்கிறது. கவனிக்கவும் என்ற அறிவிப்பும் பலகை ஒன்று வாயிற்புறக் கேட்டில் தொங்குகிறது. யார் இந்தச் சியாமா?

சோதனை செய்துவிட்டு 'சிறந்த பிராணிகளா' என்பது போல ஒரு பார்வையையும் பார்த்துவிட்டு எங்கோ சென்றுவிட்டது.

இதன் பிறகு குளிர்பானம் கொடுத்து உபசரித்த சிவசங்கரி என் எதிரில் அமர்ந்து மிக்க சரளமாகப் பேச ஆரம்பித்தார். எனது ஒவ்வொரு கேள்விக்கும் மிகவும் விளக்கமாகப் பதிலளித்தார். அவருடன் பேசப் பேச அவரது கூர்மையான அறிவு என்னை வியப்படைய வைத்தது. எந்தத் துறையைப் பற்றியும் மிகத் தெளிவான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார் அவர். எந்த ஒரு கேள்விக்கும் அவர் யோசிக்கவே இல்லை. வெம்டு ஒன்று, அன்றி இரண்டு என்பது போல உடனுக்குடன் பதிலளித்தார். பேட்டி முடிந்ததும் தன் கணவர் திரு. சந்திரசேகரை அழைத்துவந்து அறிமுகம் செய்தார். அந்த அன்பான தம்பதிகளின் உபசரிப்பில் மயங்கிய நான்

**சந்திப்பு: வி. ரவிச்சந்திரன்**

என்று வருபவர்களை விழிக்க வைக்கும்பொருட்டு அந்தப் பலகையிலேயே ஒரு நாயின் படமும் வரையப்பட்டுள்ளது. அதைப் பார்த்தவுடன் வேகமாக நடந்த கால்கள் நிதானமடைகின்றன. அதே சமயம் வீட்டினுள் இருந்து வந்த சிவசங்கரி நம்மை வரவேற்று உள்ளே அழைக்கிறார். உள்ளே நுழைந்ததும்தான் தெரிகிறது என்னையே வைத்த கண்வாங்காமல் சியாமா பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று. பிறகு பார்வையைத் திருப்பி என்னுடன் இருந்த புகைப்படக்காரரைப் பார்த்தது. அவ்வளவுதான் புகைப்படக்காரர் என் முதுகுடன் சேர்ந்து ஒட்டிக் கொண்டுவிட்டார். இதைக் கவனித்த சிவசங்கரி பயப்படாமல் வந்து அமருங்கள். சியாமா வந்து முகர்ந்து பார்த்துவிட்டுப் போய்விடுவாள் என்றார். அதேபோல் வேகமாக வந்த சியாமா என்னையும் புகைப்படக்காரரையும் அவரது காமிராவையும் எனது டேப்ரிக்கார்டரையும் கவனமாக மோப்பம் பிடித்து

நீண்ட நேரம் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அப்போது இடையில் இலங்கைப் பத்திரிகைகளைப் பற்றி உங்களது கருத்து என்ன என்று கேட்டேன். இலங்கைப் பத்திரிகைகளைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் எப்படிக் கருத்துத் தெரிவிப்பது என்றார். கொழும்பிலிருந்து வெளியாகும் மாதப் பத்திரிகை ஒன்றின் பங்குனி இதழில் வெளியான சிவசங்கரியுடன் பேட்டி என்ற பகுதியைப் பற்றிக் கூறி பத்திரிகையைப் பார்க்காமலா பேட்டியளித்தீர்கள் என்றேன். மிகவும் ஆச்சரியமடைந்த அவர் என்னைப் பேட்டி எடுக்கும் முதல் இலங்கைப் பத்திரிகை 'ஈழநாடு'தான். அப்படியிருக்கையில் எனது பேட்டி எப்படி வெளியாயிற்று என்று விழித்தார். (அவரைச் சந்திக்காமலேயே அவரது பேட்டி எப்படி வெளியானது என்ற அந்தப் பத்திரிகையினர்தான் விளக்கவேண்டும்.) இரவு 8-30 மணிக்கு அவர்களிடம் அரை மனதுடனே விடை

பெற்றபோது சியாமா (இறுதியாக ஒருமுறை பரிசோதித்த பிறகு அனுப்பிவைத்தாள். இதோ அந்தப் பேட்டி.

கேள்வி: ஈழநாடு வாசகர்கள் சார்பில் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பதில்: நானும் மிக்க மகிழ்ச்சியுடன் உங்களுக்குப் பதில் அளிக்கக் காத்திருக்கிறேன்.

கே: நீங்கள் முதன் முதலாக எப்படிக் கதைகள் எழுத ஆரம்பித்தீர்கள்?

ப: இக்கேள்விக்கான பதிலை எத்தனையோ முறை கூறிவிட்டேன். இருந்தாலும் ஈழநாடு வாசகர்களுக்காக மீண்டும் கூறுகிறேன். நான் தமிழ் அதிகம் படிக்காதவள். பள்ளியில் படித்தது ஆங்கிலத்தில்தான். கல்லூரியில் கூட சங்கிருதமும் ஆங்கிலமும்தான் படித்தேன். தமிழ் படிக்கவில்லை. இதனால் தமிழ் நன்கு பேச வரும் என்றோ எழுதவரும்

கள், ஆனால் எனக்கு எழுத வரும் என்று ஒருபோதும் நான் நினைத்தது கிடையாது. எழுதவேண்டுமென்ற ஆர்வமோ ஆசையோ கனவோ எனக்கிருந்ததே கிடையாது. கல்யாணம் ஆயிற்று. எனது கணவர் அப்போது வட இந்தியாவில் இஞ்ஜினியராக இருந்தார். வட இந்தியாவில் இரண்டுவருடங்கள் பணிபுரிந்த பிறகு அவரை சென்னைக்கு மாற்றினார்கள். 'உனக்குக் குடும்பம் நடத்துவதில் நல்ல அனுபவம் ஏற்பட்டுள்ளது. எனவே நீ ஏதேனும் ஒரு வேலையில் சேர்ந்தால் இன்னும் உனக்கு ஒரு விசாலமான அனுபவம் கிடைக்கும்' என்று சென்னைக்கு வந்ததும் என் கணவர் கூறினார். எனவே சென்னையில் இருக்கும் First National City Bank என்ற அமெரிக்க வங்கியில் பொது மக்களுடன் பழகும் கலாசார

பறக்கவிட்டால் அதற்கு ஏற்படும் ஒரு பிரமிப்புத்தான் எனக்கு ஏற்பட்டது நான் பல தரப்பட்ட மனிதர்கள் அவர்கள் என்னிடம் கூறியவேதனைகள். நான் வாழ்க்கையில் வேதனையே இல்லாமல் வளர்ந்தவள். எனவே பிறரது வேதனையைக் கேட்டதும் எனக்குள் ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பு இவைகளையெல்லாம் எழுதினால் என்ன என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது. அப்போதுதான் முதல் கதை உருவாயிற்று 'அவர்கள் பேசட்டும்' என்ற எனது முதல் கதை 1968 ஏப்ரல் மாத கல்கியில் வெளிவந்தது. அதிலிருந்து எனக்கு ஒரு அதிர்ஷ்டம் என்னவென்றால் நான் எழுதிய எந்தக்கதையும் இதுவரை திரும்பி வந்ததே இல்லை. இப்போதெல்லாம் பத்திரிகை ஆசிரியர்களே என்னிடம் கதையைக்கேட்டு வாங்கிப் பிரசுரிக்குமளவிற்கு கூடவுள் வைத்திருக்கிறார். எனது முதல்கதை பிரசுரமாகாமல் திரும்பியிருந்தால் ஒருவேளை நான் வேறு துறையை நாடி விருப்பேனோ என்னவோ! முதலிலிருந்தே எனக்கு வெற்றியே தொடர்வதால் இதை அதிர்ஷ்டம் என்றே கருதுகிறேன்.

என்றோ நான் நினைக்கவில்லை. கல்லூரியில் B. Sc. பட்டம் பெற்றேன். கல்லூரியில் படிப்பு முடிந்தவுடன் 1968-ல் திருமணமாகியது. இந்த இடத்தில் எனது பெற்றோர்களைப் பற்றிச் சிறிது கூறுகிறேன்.

சென்னையில் ஆடிட்டர் சூரி என்றபெயர் மிகப் பிரபல்யம். எனது தகப்பனாருடைய சூரி அண்ட் கொம்பனிக்கு அந்நாட்களில் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கூட கிளைகள் இருந்தன. அவர் என்னை மிக நன்றாக வளர்த்தார். அன்பான அப்பா, அம்மா, அன்பான உடன் பிறந்தோர். அதாவது ஒரு நல்ல சூழ்நிலையில் நான் வளர்ந்தேன் என்று கூற வருகிறேன். குழந்தைகள் என்றால் அவர்களுக்கு எல்லாத் திறமைகளும் இருக்கவேண்டுமென்பது எனது தந்தையின் கொள்கை. எனவே எனக்குச் சிறுவயது முதல் பாட்டு, நடனம் முதலியவற்றில் பயிற்சி யளித்தனர், நான் பதினெறு வருடங்கள் முறைப்படி நடனம் பயின்றுள்ளேன். சிறந்த என். சி. சி. மாணவியாக டெல்லி சென்றுள்ளேன். எதைச் செய்தாலும் சிறந்ததாகச் செய்யவேண்டும் என்பது என் பெற்றோர்களின் ஆசை. அவர்களும் என்னை ஊக்குவித்துக்கொண்டே இருந்தார்

அதிகாரியாகப் பணியாற்ற ஆரம்பித்தேன். நான் எப்போதுமே எல்லோருடனும் கலகலப்பாகப் பேச ஆரம்பித்துவிடுவேன். மக்களிடம் பேசுவது எனக்கு எப்போதும் சுலபமான ஒன்று. எங்கள் குடும்பம் மிகவும் ஆசாரமானது. அப்பா, அம்மா மனதால் மிகவும் முன்னேறியவர்கள். என்றாலும்கூட ஆசாரத்தைக் கைவிட்டவர்கள் இல்லை. ஆண்களுடன் பழகுவதோ குடிப்பதோ எங்களுக்கு மிகவும் வேண்டாத விஷயங்கள். ஆனால் நான் பணியாற்றும் போது ஆபீஸ் சம்பந்தப்பட்ட கூட்டங்களில் ஒரு வித்தியாசமான சூழ்நிலையில் பழக நேர்ந்தது. அந்தச் சமயத்தில் சில குடிகாரர்களையும் சந்தித்தேன். அவர்கள் இன்றைக்கு ஒன்று பேசுவது, நாளைக்கு அதைப் பேசாததுபோல நடிப்பதெல்லாம் எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. மக்கள் இன்றைக்கு ஒன்று சொல்லி நாளைக்கு ஒன்று சொல்லமுடியுமா? இப்படியெல்லாம் வேடம் போடமுடியுமா என்று நான் ஆச்சரியப்பட்டேன். இந்தச் சூழ்நிலை மாறுதல்களும் என் மனதில் ஒரு கொந்தளிப்பு உருவாகியது. அதாவது கூண்டுக்குள் அடைத்து வைத்திருந்த ஒரு பறவையை மைதானத்தில்

நான் முதல் கதையை அனுப்பி அது ஒப்புதல் ஆனபிறகு கல்கி ஆசிரியர் ராஜேந்திரன் என்னை ஒரு விழாவில் சந்தித்தார். மனித உணர்ச்சிகளை நீங்கள் மிகவும் அழகாக எழுதுகிறீர்கள். அதுதான் உங்களுடைய பலம். அதை விட்டுவிடாதீர்கள். உணர்ச்சிகளைக் கையாள்வதில் மிகவும் கவனமாக இருங்கள். அதை வளர்த்துக் கொள்ளுங்கள் என்றார். அவரது வார்த்தைகளைக் கருத்தில் கொண்டுதான் இன்றுவரை கதை எழுதுகிறேன்.

கே: முதல் கதை பிரசுரமான உடனே உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

ப: மிக்க சந்தோஷமாக இருந்தது. கதைக்கு ஒப்புதல் அளித்து கல்கியிலிருந்து வந்த கடிதத்தையே சுமார் பதினைந்து இருபது முறை படித்திருப்பேன். பார்ப்பவர்களிடமெல்லாம் என் கதை 'வரப் போகிறது வரப்போகிறது' என்று கூறவேண்டுமென்ற ஒரு பரபரப்பு. கதை வெளியான பிறகு அதை எத்தனை முறை படித்தேன் என்று எனக்கே தெரியாது. ஒருவரை முன்னோடியாகக் கொள்ளாமல் ஒருவருடைய சிபாரிசோ தூண்டுகோலோ இல்லாமல் நான் எழுதியனுப்பிய ஒரு கதை நா

[6-ம் பக்கம் பார்க்க]

நம்பிக்கையான நவநாகரிக தங்க,வைர நகைகள் வேண்டுமா?

**பொ. அம்பலவாணர்**

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
ஜெய்சங்கர்—சுஜாதா
நடித்த
நீ ஒரு மகாராணி

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Stanley Baker
THE LAST GRENADE

வெலிங்டன்
(சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
தாயைக் காத்த
தனயன்

# கிராமியக்......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவு இயக்கங்கள் எல்லாமாகச்சேர்ந்து கிராமியக்கடன் தொகையில் 7.8 % மட்டுமே கடனாகக் கொடுத்து உதவியிருந்தன.

இராமிய கடன்படுநிலை—1957

உதவிமூலம்

| | |
|---|---|
| அரசாங்கம் | — 2.6 |
| வர்த்தக வங்கிகள் | — 1.1 |
| கூட்டுறவு இயக்கம் | — 4.1 |
| உறவினர், நண்பர்கள் | — 44.2 |
| நிலப்பிரபு | — 8.0 |
| வட்டிக்கு கொடுப்போர் | — 15.0 |
| வர்த்தக ஏஜண்டுகள் | — 11.0 |
| ஏனையோர் | — 14.0 |
| | 100.0 |

இவ்வாண்டில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு நோக்கங்களைக்கொண்டு விவசாயத்துறைக்கு உதவும் எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்டன. இக்கிராமியத்துறைக்கு வலுவுள்ள நிதி ஆதரவும் ஆலோசனைகளும் அவசியமாக இருந்ததை பழைய சம்பவங்களின் விளைவுகள்மூலம் தெளிவாகத் தெரிகிறது.

## மக்கள் வங்கி ஸ்தாபிதம்

நாட்டின் பொருளாதாரத்திற்கு சார்ந்த முறையில் கூட்டுறவு இயக்கம் அளித்தசேவை போதாமையின் விளைவாக, கூட்டுறவுத் துறையுடன் இணைந்து செயல்படும் என நிறுவப்பட்ட இலங்கை வங்கி அந்த நோக்கத்தை நிறைவேற்றத் தவறியமையுந்தான் மக்கள் வங்கியின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணம் எனலாம். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு கூட்டுறவுச் சம்மேளன வங்கியும், கூட்டுறவு வங்கிகளும் அளித்த நிதி உதவியும் சேவையும் பற்றாக்குறையாக இருந்தமை மக்கள்வங்கி தோன்றுவதன் அவசியத்தை ஏற்படுத்துவனவாக அமைந்தன. மக்கள் வங்கியின் நோக்கம் அதனை ஆரம்பிக்க அனுமதியளித்த 29ம் இலக்க 1961ம் ஆண்டுச் சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

"மக்கள் வங்கியின் நோக்கம் நிதியுதவி அளிப்பதன் மூலம் இலங்கையின் கூட்டுறவு இயக்கம், கிராமிய வங்கி, விவசாயக் கடன் என்பனவற்றை அபிவிருத்திசெய்வதும், கூட்டுறவுச் சங்கங்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், விவசாயக் குழுக்கள், ஏனையோருக்கும் மற்றும் உதவிகளை வழங்குதலும் ஆகும்."

(அடுத்த வாரம் மிகுதி)

# இளசங்கரி......

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மானது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு வெளியாகியுள்ளது என்பதைநினைத்து பலமடங்கு மகிழ்ந்தேன்.

கே: இதுவரை எத்தனை கதைகள் எழுதியுள்ளீர்கள்?

ப: எனக்கு எண்ணிக்கை தெரியவில்லை. 1968 ஏப்ரலில் முதல் கதை கல்கியில் வந்தாலும் 1969 ஜனவரியில்தான் எனது இரண்டாவது கதை வந்தது. இது ஆனந்தவிகடனில் பிரசுரமாகியது. அதிலிருந்து படிப்படியாக முன்னேறிச் சென்று இன்று ஓய்வில்லாமல் எழுதுமளவிற்கு வந்துள்ளேன்.

கே: கதைக்கான சூழ்நிலைகளையும் இடங்களையும் உங்கள் சுற்றுப்புற சூழ்நிலைகளைக் கொண்டே தான் தேர்ந்தெடுக்கிறீர்களா?

ப: பெரும்பாலும் கதைகளில் வரும் ஊர்களையும் சூழ்நிலைகளையும்தானாகவே கற்பனையில்தான் உருவாக்குகிறேன். உதாரணமாக 'இதயம் பேசுகிறது' சஞ்சிகையில் 47 நாட்கள் என்ற எனது தொடர்கதை வெளியாகிறது. அதில் வரும் ஆதிச்சபுரம் என்ற கிராமம் என்னால் படைக்கப்பட்டதுதான். எல்லாவற்றையும் நிஜமாகக் குறிப்பிட்டுவிட்டு கிராமத்தைமட்டும் கற்பனையாக்கிவிட்டால் வம்பு வராது.

கே: உண்மையான ஊரைக் குறிப்பிட்டால் என்ன வம்பு வரும்?

ப: அப்படி இழுதினால் நான் கற்பனையில்குறிப்பிடும் பாத்திரமாக யாராவது அந்த ஊரில் இருந்து, என்னை ஏன் குறிப்பிட்டு எழுதினாய் என்று சண்டைக்கு வந்துவிடுவார்களோ என்ற அச்சந்தான் காரணம்.

(அடுத்தவாரம்)

# சுடலைப்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்சமயம் சைக்கிளை உழக்கினேன். முடியவில்லை. ஏதோ இரண்டு பேர் சைக்கிளில் சென்றால் எப்படியிருக்குமோ அப்படிப் பாரமாயிருந்தது.

நான் அந்த இடத்திலேயே சைக்கிளைப் போட்டுவிட்டு ஸ்டேஷனுக்கு ஓட்டம் பிடித்தேன்.

## சுடுகாட்டில் மூதாட்டி

எழுந்து நடக்க முடியாத ஒரு மூதாட்டி ஒரு நாள் தமது வீட்டிலிருந்து காணாமல்போய் விட்டார்.

உறவினர் பலவகைகளிலும் தேடியபின் சற்றுத்தொலைவிலுள்ள சுடுகாட்டில் மூதாட்டியைக் கண்டுபிடித்தார்கள்.

"எழுந்து நடக்கமுடியாத நீங்கள் எவ்வாறு இங்கு வந்து சேர்ந்தீர்கள் என்று வினவியபோது, பாட்டி கூறிய செய்தி வியப்பாய் இருந்தது.

'நாலைந்து சிறுவர்கள் வந்து என் கையைப்பிடித்து இழுத்து கீழே போட்டு உருட்டியும், சுமந்து கொண்டும் வந்தார்கள். இங்கே வந்து சேர்ந்ததும் அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்' என்றார்.

# தமிழ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மௌனக் கருதுவோருமுளர். இந்நிலையையே பழந்தமிழிலக்கியம் எடுத்துக்காட்டுகின்றது. ஆதிமக்கள் தோன்றிய இடங்களில் தென்னிந்தியாவுமொன்றெனக்கருத இடமுண்டு. எனவே தொன்மைவாய்ந்த தமிழ் மொழியை உருவாக்கிய திராவிடர் வழி வழியே இந்நாட்டில் பிறந்து இந்நாட்டில் வாழ்ந்தோரே.

(8-ம் பக்க[illegible]

மனோகரா
(கொட்டடி)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
வந்தாளே மகராசி

6வது ஹவுஸ்புல் வாரம்!
[illegible]
ராணி (யாழ்நகர்)
சிவாஜி—மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மென் கலர்)
[illegible]

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன் - பாரதி
நடித்த
நம்மவீட்டு லக்ஷ்மி
(புதிய பிரதி)

சாந்தி யாழ். நகர் — போன் 7642
தினசரி 5 காட்சிகள்
10-30, 2-30, 4-45, 7-00, 9-30 கடைசி தினம் (19-6-78)
Charlie Chaplin Festival
பாடசாலைகள் தொடர்பு கொள்ளவும்
ஜூன் 18 காலை 8-30 மணிக்கு மட்டும்
FLOWERS FOR THE MEN IN THE MOON

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-30 p m. only
Ken Clark in
Special Mission Lady Chaplin
(Scope - Color—Spy Thriller)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) வெற்றிகரமான
தினசரி 4 காட்சிகள் 7வது வாரம்
முத்துராமன் - சந்திரகலா - ஸ்ரீவித்யா
நடித்த
காலங்களில் அவள் வசந்தம்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சி
சிவாஜி - கே. ஆர். விஜயா
நெஞ்சிருக்கும்வரை


ரீகோ போன் 7698
சிவகுமார், அம்பிகா
(யாழ். நகர்)
மதனமாளிகை

வண்ணப் படம் பார்த்தவர்களின் தீர்ப்பு - சிலர் எண்ணப்படி மீண்டும் பார்க்கவேண்டும்போன்றதொருதுடிப்பு – உன்னதநடிப்பு – உள்ளத்தைக் கவர்ந்திடும் சிறப்பு.

நாளை நாளை எனப் பின்போடாது புதுமைப்புரட்சி இயக்குநரின் மறுமலர்ச்சி காண வாரீர்! குலமகளின் நினைவால் கலைமகள் போற்றிடும்

2-வது வெற்றிவாரம்
ராஜா யாழ்நகர்
தினசரி 4 காட்சிகள்

பூப்போன்ற இதயம் - உறவை எனக்கே சொந்தம் - மயக்கம் வரும் வேளை - மாலைப் பொழுதினிலே காணும் இன்பம்.



★
கமலஹாசன்
ரஜனி
ஆலம்
சுதா
Y. விஜயா
சந்திரன்
நடித்த
★

கலாகேந்திராவின்
மன்மத லீலை
கதை வசனம் டைரக்ஷன்: K. பாலசந்தர். (ஈஸ்ட்மென் கலர்)


உலகின் முதலாவது செய்மதி ஜேர்மனியில் உருவாகியது.

# நீங்களும் சொகுசான சவாரிசெய்ய ஜேர்மன் தொழில்நுட்பம் நிறைந்தது

# SIMSON-MZ

(சிம்சன் - MZ)

நீடிய பாவனைக்கென்றே உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்




உறுதியான தன்மையையும் பொருளாதார சிக்கனத்தையும் வழங்கும். எமது காட்சிச்சாலையில் அறிந்துகொள்ளலாம்.

தற்போதைய விலைகள்

| | |
|---|---|
| 50 cc - ரூபா 8,950-00 | 150 cc - ரூபா 13,950-00 |
| 125 cc - ரூபா 12,950-00 | 250 cc - ரூபா 17,550-00 |

தாராளமாக உப உறுப்புக்களும் திறமையான பராமரிப்புச் சேவை வசதியும் கிடைக்கும்.

மேலதிக தகவல்களுக்கு :

மோட்டார் சைக்கிள் விற்பனைப்பகுதி,
டீசல் அன்ட் மோட்டார்
என்ஜினியரிங் கம்பனி லிமிட்.
65, ஜெத்தவன வீதி, கொழும்பு - 14.

